**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 204/2018**
திரு. ராமசந்திரன் (P.W –1) **05.03.2026**

**மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் அரசு அலுவலகத்தில் பணியாற்றி ஒய்வு பெற்றுள்ளேன். தாவாவில் பிரதிவாதிகள் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை படித்துபார்த்தேனா என்றால் பார்த்தேன். எதிர் வழக்குரையில் சொத்தை விற்பதற்காக கிரைய ஆவணம் ஏற்படுத்தவில்லை என்று வாதுரைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் சங்கதிகளை மறுத்து பதில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்காக தனி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு முடிவு ஏற்பட்டுள்ளதாக சாட்சி தன்னிச்சியாக முன் வந்து கூறுகிறார். தாவா சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட கிரய ஆவணம் 2010 ஆம் வருடம் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

2. 2010 ஆம் வருடத்திற்கு பிறகு எட்டு வருடங்கள் எந்த நடவடிக்கையும் தாவா சொத்தை பொறுத்து நான் எடுக்கவில்லை என்றால் சரி. அவர்கள் வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் தாக்கல் செய்தேன். பிரதிவாதி 2013 ஆம் வருடம் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரி. 2019 முதல் 2013 ஆம் வருடம் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி. சொத்தை கிரயம்

பெற்ற பிறகு அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களிடமே சொத்தை கொடுத்து இருந்தேன்.

3. பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கிலும் கிரைய ஆவணம் செல்லாது என்று தான் நடந்தது என்றால் ஆமாம். பிரதிவாதி 2013 இல் வழக்கு தாக்கல் செய்து பிறகு 5 வருட காலம் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தவறு. வழக்கு தாக்கல் செய்தேன். கிரைய ஆவணம் ஏற்பட்டது பிரதிவாதி மறுத்துள்ளதால் தாவாவில் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகையை பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு. பிரதிவாதி தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்து கிரைய ஆவணத்தின்படி எனக்கு பாத்தியப்பட்டது என்று விளும்புகை செய்ய கோரி எதிர் கோரிக்கை மனு தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்தோம். பிரதிவாதியின் கோரிக்கை அந்த தாவாவில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

4. இந்த வழக்கிலும் தாவா சொத்தைப் பொறுத்து என் மனைவி பிரதிவாதிபெயரில் ஏற்பட்டுள்ள கிரய ஆவணம் சரியானது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்து பிரதிவாதிக்கு 2002 ஆம் வருட ஆவணத்தின் படி பாத்தியம் என்றால் ஆமாம். தாவா சொத்தில் பிரதிவாதி தான் இன்று வரை சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரி. என் மனைவி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தில் தாவா சொத்து கிரைய தேதியில் சுவாதீனம் கொடுத்ததாக சொல்வது தவறா என்றால் சரியல்ல. சொத்தை நான் வாங்கியவுடன் எனக்கு சுவாதீனம் கொடுத்தார்.

5. தாவா சொத்தை பொருத்து என் மனைவி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் உண்மையானது அல்ல, உண்மையிலேயே ஏற்பட்டு இருந்தால் அன்றைய தினமே சுவாதினம் கொடுத்து பிரதிவாதி தாவா சொத்தை விட்டு வெளியேறி இருப்பார் என்றால் சரியல்ல. என் மனைவி பெயரில் ஏற்பட்ட

கிரைய ஆவணம் கடன் பெற்றதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் தவறு. கடனுக்காக ஏற்படவில்லை தாவா சொத்தில் வாடகைக்கு இருப்பதாக என் மனைவி பெயரில் கிரயம் ஏற்பட்ட பிறகு பிரதிவாதி ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்து உள்ளாரா என்றால் இல்லை. நான் வாடகை கேட்கவில்லை. தாவா சொத்தை பொறுத்து என் மனைவி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தையே பிரதிவாதி மறுப்பதால் நான் நஷ்ட ஈடு போடுவதே சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தின் கிரைய ஆவணம் என் பெயரில் ஏற்படவில்லை என்றால் சரி. என் மனைவி பெயரில் உள்ளது. நான் அரசு ஊழியராக இருந்ததால் என் மனைவி பெயரில் பைனான்ஸ் செய்து வந்தேன் என்றால் தவறு. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் கால தோஷத்தால் பாதிப்படைகிறது என்றால் தவறு. பிரதிவாதி எந்த ஒரு நஷ்ட ஈடும் தாவாவில் கோரி உள்ளவாறு தரவேண்டியது இல்லை என்றால் தவறு. பிரதிவாதி எனக்கு எதிராக தாக்கல் செய்த வழக்குக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் எனக்குத் தகவல் இல்லை. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.05 18:35:22 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.